திராவிட மாடல் நெய்யில் செய்த ஸ்வீட்டுகள்!



தீவிரவாதிகளுடன் த.வெ.க. நிர்வாகிக்கு தொடர்பு!

நாகை, அக். 19– நாகை மாவட்டம் சிந்தாமணி யில் த.வெ.க. மாவட்ட செயற்குழு உறுப் பினர் பூபாலன் வீட்டில் மத்திய வரு வாய் புலனாய்வு இயக்குநரக (DRI) அதிகாரிகள் 9 மணி நேரத்திற்கும் மேலாக அதிரடி சோதனை நடத்தி னர். இலங்கையில் இருந்து சர்வதேச அளவில் கடத்தப்படும் மெத்தம் பெட டமைன் போதைப்பொருள் தொடர் பான புகாரின் பேரில் இந்த சோதனை நடந்தது. 5 பேர் கொண்ட DRI அதிகாரிகள் குழு பூபாலன் வீடு மற்றும் அவரது நண்பர் சுகன் வீட்டி லும் சோதனை நடத்தியது. 270 கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 135 கிலோ மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப் பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். விடிய விடிய நடத்திய விசார ணைக்கு பிறகு த.வெ.க. நிர்வாகி பூபாலன் மற்றும் அவரது நண்பர் சுகன் ஆகியோர் கைது செய்யப்பட டுள்ளனர். இதனிடையே, கைது செய்யப்பட்ட த.வெ.க. நிர்வாகி உள் ளிட்ட 4 பேர் தஞ்சை சிறப்பு நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சந்தி சிரிக்கிறது!

பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது!

முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. பேட்டி!

புதுக்கோட்டை. அக்.19– புதுக்கோட்டை மாவட்டம் திரு மயம் சட்டமன்ற தொகுதிக்கு உட் பட்ட பிள்ளைமங்கலத்தில் நிழற் குடையையும் துளையானூர் மற்றும் அண்டக்குடிப்பட்டியில் கலையரங்கத்தையும் இளஞ்சா ரூரில் சுகாதார வளாகத்தையும் திறந்து வைத்த முன்னாள் அமைச்சரும் திருமயம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான எஸ்.ரகுபதி இளஞ்சாவூரில் செய்தியாளர் களை சந்தித்தார்.

அப்போது அவர் பேசுகை யில்:

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இந்த ஐந்து மாத காலத்தில் எந்த ஒரு புதிய திட்டங்களும் வர வில்லை அறிவிப்பு மட்டுமே வரு கிறது அறிவிப்பை நிறைவேற்ற ஆயத்த பணிகள் கூட நடைபெற வில்லை.

ஐம்பதாயிரம் கோடி கடன் வாங்கியதாக கூறினார்கள். தற் போது 2 லட்சம் கோடிக்கு மேல் கடன் வாங்கி இருப்பதாக கூறுகி றார்கள் மின்வெட்டு மின்சார பற் றாக்குறை, தி.மு.க. ஆட்சியில் 15 ரூபாய்க்கு போடப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மிகுந்த குறைந்த விலையில் தமிழ்நாடு மக்கள் பயன்பெறும் வகையில் 15 ரூபாய் அதிகம் என்பதால் 35 ரூபாய் என்று குறைந்த கட்டணத் தில் மின்சாரத்தை கொள்முதல் செய்கிறார்கள்.

மக்கள் வரிப்பணம் வீணாகிறது!

மக்கள் வரிப்பணம் வீணாகி றது. குடிநீர் பஞ்சம் தலை விரித்து ஆடுகிறது. ஆழ்துளை கிணறு களை ஆழப்படுத்தி போடுங்கள் மக்கள் குடிப்பதற்காக தண்ணீர் கிடைக்கும் என்று அறிவுறுத்தி வந்திருக்கின்றோம்.

தவெக அரசு ஒன்றிய அரசின் பகைத்துக் கொள்ளாது. காங்கி ரஸ் கட்சியையும் பகைத்துக் கொள்ளாது. பாலுக்கு காவல் புண்ணைக்கு தோழன் என்ற வகையில் தான் இந்த அரசின் நிலைப்பாடு இருக்கிறது.

நிச்சயமாக ஒன்றிய அரசை பகைத்துக் கொள்ள மாட்டார்கள் ஒன்றிய அரசின் ஸ்லீப்பர் செல் லாக கடந்த தேர்தலில் இருந்தி ருக்கிறார்கள்.

எங்கெங்கெல்லாம் எஸ்ஐஆ ரில் 80,000 வாக்குகள் நீக்கப்பட்டதோ அங்கெல்லாம் தவெக வெற்றி பெற்று இருக்கி றது. குறிப்பாக சென்னை செங் கல்பட்டு ராணிப்பேட்டை திருவள் ளூர் காஞ்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் என்று அடுக்கி கொண்டே போகலாம்.

எஸ்ஐஆரை எதிர்க்கக்கூடிய தைரியம் தவெகவுக்கு கிடை யாது. எஸ்ஐஆரால் வெற்றி பெற் றது தவெக.

மக்கள் மனதில் மிகப்பெரிய விரக்தி மனப்பான்மை இருக்கி றது, ஏண்டா வாக்களித்தோம்



என்ற கஷ்டப்படுகிறோம் என்ற சங்கடத்திற்கு ஐந்து மாதத்திற் குள்ளாக மக்களை ஆளாக்கி இருக்கிற அரசுதான் தவெக அரசு.

தைரியமாக பொய் பேசக்கூ டிய உண்மைக்கு புறம்பாக சொல் லக்கூடிய அமைச்சர்களை கொண்டுள்ள அமைச்சரவை இந்த அமைச்சரவைதான்.

எந்த பொய்யை வேண்டும் என்றாலும் சொல்லலாம் மக்கள் நம்புவார்கள் என்று நம்பிக்கை யோடு இருக்கக்கூடியவர்கள் இவர்கள்.

ரீல்ஸ் போட்டு பரப்புகிறார்கள்!

ஒரு திட்டத்தை சொல்லிவிட்டு ரீல்ஸ் போட்டு அதை பரப்புகிறார் கள்.

மக்கள் மகிழ்ச்சியுடன் இருக் கிறார்கள். விழாக்களை கொண் டாடுகிறார்கள் அப்படி எல்லாம் சொல்லிக் கொண்டு திரியக்கூடிய ஒரு ஆட்சி தான் இது.

ஆர்டிபிசியல் இன்டெலிஜென் மூலமாக நடந்து வரும் ஆட்சி தான் தவெக ஆட்சி.

உணவுத்துறை அமைச்ச ருக்கு அரிசி விலையை பற்றி தெரியாது. ரேஷன் அரிசியை பற்றி மட்டும் கேட்டுவிட்டு சென்று விடுவார். மளிகை கடையில் அரிசி விலை கேட்டால் தான் தெரியும் 1200 ரூபாய் விற்ற மூட்டை ஆயிரத்து 800 ரூபாய் விற்கப்படுகிறது. அரிசி 50 சதவீ தம் கூடியுள்ளது. மக்கள் வாங்கும் திறனை இழந்து விட்டார்கள். மளிகை பொருள் பருப்பு எண் ணெய் அனைத்தும் உயர்ந்துவிட் டது. சர்க்கரை 45 தாண்டி பார்த்த தில்லை 70 ,75க்கு வந்துள்ளது எல்லா வகையிலும் விலைவாசி உயர்வாக இருக்கிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் அதிக விலைவாசி உயர்வை சந்தித்து வருகிறது. தமிழ்நாட்டில் தான் எல்லாம் விலையும் உயர்வு.

அரிசியை பதுக்கி வைத்திருப் பதாகவும் அதனால் தான் இந்த விலை உயர்வு என்று உணவுத் துறை அமைச்சர் கூறுகிறார். பதுக்களை கண்டுபிடிக்க வில்லை என்றால் ஏன் ஆட்சி நடத்துகிறீர்கள். பதுக்கல் செய்த அரிசியை கண்டுபிடித்து அதனை பறிமுதல் செய்து மக்க ளுக்கு இலவசமாக கொடுக்க லாம். பறிமுதல் செய்யக்கூடிய அதிகாரம் உணவு துறைக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டில் போதைப்பொ ருள் கலாச்சாரம் மற்றும் புழக்கத்தில் முக்கிய பங்கு வகிப் பவர்கள் த.வெ.க. கட்சியை சேர்ந்தவர்கள் தான். கடந்த ஆட் சியையும் இந்த ஆட்சியையும் ஒப்பிட்டால் நாங்கள் கட்டுப்படுத்தி னோம் வராமல் தடுத்தோம். வரு கின்ற வழியில் எல்லாம் தடுக்க முயற்சித்தோம். மீறி வந்ததையும் பறிமுதல் செய்தோம் இந்த ஆட்சி யில் சுதந்திரமாக போதைப்பொ ருள் விற்பனை நடைபெறுகிறது.

ஜோதிடரை நம்பி ஆட்சி நடக்கிறது!

ஒரு ஜோதிட காரரையும் மூன்று ரெட்டி சகோதரரையும் நம்பி ஆட்சி நடைபெறுகிறது. இங்கிருக்கும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தான் பேசுவது தான் எல்லாம் தான் ஆலோசனை வழங்குகிறோம் என்று எண்ணி வருகிறார். ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதான் வளர்ச்சி ஆள் வளர்ந்திருக்கிறார் அறிவு வளரவில்லை அறிவு வளர்ந்ததாக தெரியவில்லை அறியாமையால் பேசி வருகி றார்..

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜமோகன் பள்ளிக் கூடத்தை சிறை என்று கூறுகிறார். தண்டனை வழங்கும் சிறைச்சாலையாக பள்ளிக்கூடங் கள் இருக்கக் கூடாது என்று ராஜ் மோகன் கூறுகிறார்.

நீதிமன்றம் தான் தண்டனை வழங்கும் தண்டனையை செயல் படுத்துவது தான் சிறைச்சாலை. இந்த அடிப்படை அறிவு கூட அவ ருக்கு கிடையாது.

பள்ளிக்கூடத்தை சிறை என் றால் தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளி மாணவர்கள் சிறைச்சாலையில் இருக்கிறார் களா? இவ்வாறு பேசினால் பள் ளிகளில் உள்ள மாணவர்கள் குற் றவாளிகளா? ஆசிரியர்கள் குற்றவாளிகளா? இது போன்ற கருத்தை ஏன் பேசுகிறார். யார் என்ன பேசுகிறோம் என்று புரியா மல் பேசுகின்ற இன்று தமிழ்நாடு சந்தித்துள்ளது வெட்கக்கேடான செயல்.

எஸ்ஐஆரில் குறைந்த வாக்கு களை நீக்கிய இடத்தில் ஏன் தவெகவால் வெற்றியடைய முடி யவில்லை. தற்போது தைரியம் இருந்தால் தேர்தல் நடத்தட்டும் அப்படி தேர்தல் நடத்தினால் ஆட் சியைக் பிடித்துக் காட்டக்கூடிய தைரியம் திமுகவுக்கு மட்டும்தான் உண்டு. வேறு எந்த கட்சிக்கும் கிடையாது.

மோடியின் சிலீப்பர் செல் தான் தவெக. அதற்குப் பிறகு மோடியிடம் கோரிக்கை வைத் தால் என்ன கோரிக்கை வைக்க வில்லை என்றால் என்ன மோடி யிடம் எதையும் கேட்க மாட்டார். மோடியிடம் தைரியமாக கோரிக் கைகளைக் கேட்டவர் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் தான். மோடி முன்னிலையில் நேரு ஸ்டேடியத்தில் பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து பேசிய வர் மு. க.ஸ்டாலின் அவர்கள். தைரியமாக எந்த திட்டத்தையும் கொண்டு வருவார். ஒன்றிய அர சுக்கு அனுப்புவார் ஒன்றிய அர சுக்கு அழுத்தம் கொடுப்பார் தமிழ் நாட்டில் நலன் கருதி ஆட்சி நடத்தியவர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தான்.

பாஜகவை திமுக ஆதரித்து இருந்தால் ஆட்சியை இழந்தி ருக்க மாட்டோம். எங்களை தூக்கி சிம்மாசனத்தில் உட்கார வைத்து அழகு பார்த்திருப்பார்கள். பாஜ கவை இந்தியாவிலேயே எதிர்த்த ஒரே இயக்கம் திமுக தான். நாங் கள்தான் எதிர்த்தோம் எங்களைப் போன்று எதிர்த்தவர்கள் யாரும் இல்லை மற்றவர்களெல்லாம் ஏதோ ஒரு இடத்தில் சமரசம் செய்து கொள்வார்கள். சமரசத் திற்கு இடம் கொடுக்காமல் ஒன் றிய அரசை எதிர்த்த ஒரே இயக் கம் திமுக தான் ஆட்சியில் இருந்தபோதும் இன்றும் அதே நிலைப்பாடுடன் தான் இருக்கி றோம்.

ஒரு முதலமைச்சர் வரவேற் றார் என்பதெல்லாம் பெரிய விஷ யம் அல்ல மம்தா பானர்ஜி ஸ்டாலின் எல்லாம் சென்று வர வேற்றது இல்லை பிரதமர் கலந்து கொள்கிறார் என்றால் கலந்து கொள்ளட்டும் சில நேரம் புரோட டக்கால்படி போக வேண்டும் என் றால் போவார்.

மெட்ரோ ரயிலை திறக்கும் பொழுது யார் யாரெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள் ஆனால் முதலமைச்சர் விழித்துக் கொண் டிருந்தார். இது என்ன கேட்கிறீர் கள் என்று கூட அவர் கேட்க வில்லை. ப்ரோ ரயிலைப் பற்றி என்ன கேட்கிறார்கள் நாங்கள் விளக்கம் சொல்கிறோம் என்று கூட அவர் சொல்லவில்லை. அவர் அமைதியாக வந்த காட் சியை அப்படியே படம் பிடித்து காண்பித்து விட்டார்கள். பிரதம ரோடு சேர்ந்து அவர் இணக்கமா கத்தான் இருப்பார் அடிமைகள் இணக்கமாகத்தான் இருப் பார்கள்.

சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது.

இவ்வாறு எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. பேட்டியளித்தார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; விலைவாசியா! அது உயரவே இல்லையே! என்று ஒரு மந்திரி சொன்ன இரண்டாவது நாளே, விலைவாசியை கட்டுப்படுத்த அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டி விவாதிச்சுதே இந்த த.வெ.க. அரசு கேள்விப்பட்டியா?

போண்டி : **ஆமாய்யா; கேள்விப்பட்டேன். விலைவாசி என்னமா அதிகரிச்சி கழுத்தை நெரிக்குது. விலைகள் குறைந்த பாடில்லையே! இந்த லட்சணத்தில் 'துக்ளக் ஆட்சி'யையே தூக்கி சாப்டிரும் போலிருக்கு இந்த 'நவீன துக்ளக் ஆட்சி'யின் செயல்பாடுகள் எல்லாம்.**

சிந்திக்கத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

தேசியத்தாரின் ஏகாதிபத்யம்!



என். வி. நடராசன்

இந்தியத் துணைக் கண்டத்தை பிரிட்டிஷார் ஆண்டு வந்த சமயம், ஜனநாயகத்தின் உயர்வையும், ஆட்சி முறையிலே ஜனநாயகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டிய அவசியத்தையும் தேசியத் தலைவர்கள் தவறாது நாட்டிலே எடுத்துக் கூறி வந்தனர்! வெள்ளையர் தம் பிடிப்பை விட்டுக் கொடுத்து வெளியேறினால், அதற்குப் பிறகு ஜனநாயகம் என்ற சொல்லுக்கே - காங்கிரஸ் ஆட்சிதான் ஒரு "மாதிரி" (மாடல்) ஆக இருக்கும் என்றும் கூறினர்!

இந்தியாவிற்கு மட்டுமென்ன; உலகிற்கே ஜனநாயகத்தின் முழுஉருவைக் காட்டப் போவதை காங்கிரசார் ஆட்சி பீடமேறிய அடுத்த நிமிடமேகாணலாம்-என்றுகூடசிலதலைவர்கள் செப்பினர்!

ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள அந்தப் பெரிய மனிதர்களிடமிருந்து ஜனநாயகப் பண்பை சாதாரண அளவுக்குக்கூட காண இயலவில்லை! அந்தப் பெரிய புள்ளிகளிடம் மட்டுமென்ன; அவர்களின் ஆட்சி முறையிலும்.. அதே லட்சணம்!

இன்னும் சொல்லப்போனால் ஆயிரம் மைல்களுக்கப்பால் இருந்து வந்த வெள்ளையர்களின் ஆட்சி முறையிலாவது குறைந்தபட்ச ஜனநாயகம் நடை முறையிலிருந்து வந்தது. ஆனால் காங்கிரஸ் 'பிரபுக்கள்' ஆட்சி பீடமேறியவுடன் அந்தச் சாதாரண ஜனநாயகத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர்.

1947ஆம் ஆண்டு வரை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓரளவு அளிக்கப்பட்டிருந்த அரசியல் உரிமையும், அகில இந்திய ஒற்றுமை என்ற பெயரால் பாதிக்கப்பட்டுள்ளது. இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனநாயகம் என்ற போர்வையில் சர்வாதிகார ஆட்சி - ஏகாதிபத்திய ஆணவம் - கட்சி ஆதிக்கம் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது.

பிரிட்டனில், ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சி ஒன்று அமைவதில் ஆர்வம் காட்டுகின்றனர். அக்கட்சிகளுக்கு அளிக்க வேண்டிய மரியாதைக்குக் குறுக்கே நிற்பது கிடையாது. கன்சர்வேடிவ் கட்சி நாட்டை ஆளும்போது தொழிற்கட்சி எதிர்க்கட்சியாகவும், தொழிற்கட்சி ஆளும்போது கன்சர்வேடிவ் கட்சியினர் எதிர்க்கட்சியினராகவும் வசதிகள் தரப்படுகின்றன. எதிர்க்கட்சி ஒன்று இருந்தால்தான் ஜனநாயகத்தின் சிறப்பைப் பயன்படுத்த முடியும். ஆகவே மேல்நாடுகளில் ஆளும் கட்சியினரே, எதிர்க்கட்சி அமைவதற்குக் கூடுமான அளவு உதவி புரிகின்றனர். அதனால் அந்நாடுகளில் ஜனநாயகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

ஆனால் ஜனநாயகத்தைப் பற்றி கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்புவரை ஓயாமல் பேசி வந்த காங்கிரசார் இன்று ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்யும் விபரீதச் செயலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

உதாரணமாக, சென்னை மாநிலத்தை எடுத்துக்கொண்டால் தேர்தல் காலங்களில் தேசிய முகாமினரும் குறிப்பாக அமைச்சர்களும் கையாளும் முறைகளை, நாகரிகம் ஓரளவாவது தெரிந்த எவரும் கண்டிக்கத்தான் செய்வர்.

அண்மையில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களில் ஆளும் வர்க்கத்தினர் நடந்து கொண்ட விதத்தை - அவர்களின் போக்கினைக் கொண்டே திட்டவட்டமாகக் குற்றம் சாட்டுகிறோம்.

நேற்றுவரை எதிர்க்கட்சியாக இருந்தவர்களை - காங்கிரஸ் என்றால் என்ன என்பதைப் பற்றிப் புரிந்துகொள்ளவும் மனமில்லாதவர்களை -தேசிய மட்டம் என்று கருதிக்கொண்டிருந்தவர்களை -நாட்டுப்பற்றியக்கத்தினர் என்றாலே மகா பணிக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லாதவர்களிடமெல்லாம் நாட்டை ஆளும் அமைச்சர்கள் - ஏன், முதலமைச்சர் உட்பட தஞ்சமடைந்திருக்கிறார்கள்!

கதரா, கட்ட வேண்டாம் - காங்கிரசின் முக்கியக் கொள்கைகளைப் பற்றியா, கவலைப்பட வேண்டாம் - காங்கிரசில் நீண்ட காலமாக இருப்போர் எதிர்ப்பார்கள் என்ற அச்சமா, விடுங்கள் அதை, நான் இருக்கிறேன் எதிர்ப்பவர்களை மட்டந்தட்ட - ஆகவே சும்மா கையெழுத்துப் போடுங்கள், சேர்மன் ஆகுங்கள் - என்று பேரம் பேசினார் தேசிய முகாமினர்-அமைச்சர்கள்!

அதாவது கொள்கையைப் பற்றி காங்கிரஸ்காரர்களுக்கு, நாட்டை ஆளும் அமைச்சர்களுக்கு அக்கறை கிடையாது. எந்த வகையிலோ கிடைத்த அதிகாரம் தங்களின் பிடிப்பிலிருந்து போய்விடக் கூடாது; அதற்காகத் தங்கள் கட்சியின் கொள்கையை - கண்ணியத்தைக் கூட விலை பேசிட - அதுவும் நேற்று வரை தங்கள் கட்சியை நையாண்டி செய்து வந்தவர்களிடமே விலை பேசிட முனைகின்றனர் என்றால் இந்த "உத்தமப் புதல்வர்களிடம்" ஜனநாயகம் என்னபாடு படுகிறது என்பதை நாம் மேலும் விளக்கத் தேவையில்லை என்றே எண்ணுகிறோம்.

பிரிட்டன் போன்ற நாடுகளில், கன்சர்வேடிவ், தொழிற்கட்சி ஆகிய இரு முக்கியக் கட்சியினரும் நாட்டை முறையே அதிகப்படியான வாக்குகளையும், இடங்களையும் கைப்பற்றியவர்கள் - மக்களின் எண்ணத்திற்கு நம்பிக்கையானவர்கள் - என்ற தீர்ப்புக்கேற்ப ஆண்டுவருகின்றனர். ஆனால் அந்த இரு கட்சியினரும் கொள்கையை விலை பேசி எந்தப் பாடுபட்டாகிலும் கட்சியின் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்று எண்ணியது கிடையாது. பிரிட்டனின் நல்வாழ்வைத்தான் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர் அவ்விரு கட்சியினரும்; தங்களின் ஆதிக்கமும், ஜபர்தஸ்தும் மட்டும்தான் பெரிது என்ற மட்டமான எண்ணம் அந்நாட்டுத் தலைவர்களிடம் - முக்கியக் கட்சிகளிடம் இன்றுகூட எதிர்பார்க்க முடியாது. அதனால்தான் அங்கெல்லாம் ஜனநாயகம் வளர்கிறது - மக்களின் வாழ்வும் மலர்ந்திருக்கிறது.

ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திலேயோ காங்கிரசார் தங்கள் ஆட்சியில் கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனநாயகம் என்ற பெரிய தத்துவத்திற்கு புதிய அகராதியைக் கண்டுபிடிக்கும் விசித்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

விடுதலையடைந்த நாடுகளிலெல்லாம் வலம் வந்து அந்தந்த நாட்டில் இயங்கி வரும் ஜனநாயகம் - சமதர்மம், பொதுவுடமை ஆகிய பூங்காவிலே அமர்ந்து அகில உலக அரசியல் பிரச்னைகளைப் பற்றி ஓயாமல் பேசிவரும் நேரு பண்டிதரிலிருந்து மாநிலங்களில் தர்பார் நடத்தி வரும் அமைச்சர்கள் வரை ஜனநாயகப் போர்வையில் ஏகாதிபத்தியக் கூத்தாடுகின்றனர்!

"ஆண்டால் காங்கிரஸ்தான் இந்நாட்டை ஆள வேண்டும்; இல்லையெனில் அந்நியர்கள் ஆள வேண்டும்" என்ற வெறித்தன்மையில் இன்றைய தேசிய முகாமை வளர்த்து வருகின்றார்களேயல்லாது, இந்நாட்டிற்குரிய மக்கள் - மாற்றுக் கட்சியினர் - ஜனநாயக முறையை அளவுகோலாக வைத்து ஆள வழிவகுப்போம் என்ற பெரும் புத்தி இன்றைய ஆளவந்தாரிடம் அமையாதது வருந்தத்தக்கதாகும்.

எனவே, ஜனநாயகப் போர்வையில் ஏகாதிபத்திய தர்பார் நடத்தி வரும் காங்கிரசின் கோரப்பிடியிலிருந்து நம் நாட்டையும் மக்களையும் மீட்டு நல்வாழ்வு அளிக்க நாமெல்லாம் ஒன்றுபடுவோம். மேலும் தொடர்ந்து பணியாற்றுவோம். அடுத்துவர இருக்கும் பொதுத் தேர்தலில் இத்தீய சக்தியைக் கூடுமான அளவு தகர்த்தெறிய முற்போக்குஎண்ணம்கொண்ட, ஆனால்திட்டவட்டமானஉறுதியானகொள்கையும் மனவளமும் பெற்ற அனைவரும் ஒன்றுபடுவோம். திராவிடத்தை, திராவிடத்தின் மொழிவழிப் பகுதிகளான தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய ஒவ்வொரு மாநிலமும் எல்லா உரிமைகளும் பெற்று, உலக நாடுகளிடையேயும், இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதி மாநிலங்களிடையேயும், நேசப்பான்மையில் நீடூழி வாழப் பணியாற்றுவோம். இந்த உறுதியை திராவிடர் திருநாளன்று எடுப்போமாக; நம் பணியை இனிது முடிப்போமாக!

முரசொலி - பொங்கல் மலர் 1956